பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

13 05 2025 7 15

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- அணு ஆயுத அச்சுறுத்தல்களுக்கு இந்தியா ஒருபோதும் தலைவணங்காது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

- உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட உயர் ரக வான் பாதுகாப்பு முறைகளை இந்தியா பயன்படுத்தி வெற்றி கண்டதாக விமானப் படை செயல்பாடுகளுக்கான தலைமை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

- குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு செஞ்சிலுவைச் சங்க நிகழ்ச்சியில் இன்று பங்கேற்கிறார்.

- மும்பை பங்குச் சந்தை மற்றும் தேசிய பங்குச் சந்தை குறியீடுகள் நேற்று நான்கு சதவீத உயர்வுடன் நிறைவடைந்தது.

- 19 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து போட்டியில் இந்தியா இன்று நேபாளத்தை எதிர்கொள்கிறது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

அணு ஆயுத அச்சுறுத்தல்களுக்கு இந்தியா ஒருபோதும் தலைவணங்காது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை குறித்து நேற்று காணொலி மூலம் நாட்டு மக்களிடையே உரையாற்றிய அவர், இந்த நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பது முடிவல்ல என்றும், பாகிஸ்தானின் எதிர்கால செயல்பாடுகளைப் பொறுத்தே இந்தியா அடுத்த நடவடிக்கை மேற்கொள்ளும் என்றும் கூறினார்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை என்பது கோடிக்கணக்கான இந்திய மக்களின் உணர்வின் வெளிப்பாடு என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர் தொடங்கப்பட்டு முதல் 3 நாட்களுக்குள் பாகிஸ்தான் எதிர்பார்த்ததைவிடவும் அதிக சேதங்களை எதிர்கொண்டதாக குறிப்பிட்ட பிரதமர், இந்தியாவின் வலுவான பதிலடி தாக்குதல் மூலம் ஏற்பட்ட பதற்றத்தை தணிப்பதற்கு உலகளாவிய நாடுகள் மூலம் பாகிஸ்தான் வேண்டுகோள் விடுத்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவுக்கு எதிரான ராணுவ நடவடிக்கை மற்றும் அனைத்து தீவிரவாத செயல்பாடுகளையும் நிறுத்திக்கொள்வதாக அந்நாடு உறுதி அளித்தது என்றும் பிரதமர் கூறினார்.

அதனைத் தொடர்ந்தே பாகிஸ்தானின் தீவிரவாத மற்றும் ராணுவ நிலைகள் மீதான பதிலடி தாக்குதலை இந்தியா தற்காலிகமாக நிறுத்த முடிவு எடுத்ததாக அவர் கூறினார்.

இந்த தசாப்தம் போருக்கானது அல்ல என்பதில் இந்தியா உறுதியுடன் இருப்பதாக கூறிய அவர், அதேநேரத்தில் தீவிரவாதத்தையும் ஏற்க முடியாது என்று திட்டவட்டமாகக் கூறினார்.

பேச்சுவார்த்தையும், தீவிரவாதமும் இணைந்திருக்க முடியாது என்பதில் இந்தியா உறுதியான நிலைப்பாட்டை கொண்டிருப்பதாகவும், அதேபோல் தீவிரவாதத்துடன் வர்த்தகம் தொடர்வது இயலாதது என்றும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

பாகிஸ்தானுடன் எந்தவொரு பேச்சுவார்த்தையானாலும் அது முற்றிலுமாக தீவிரவாதம் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீர் ஆகியவை குறித்துதான் என்பதை உலக நாடுகளுக்கு இந்தியா உறுதிபட தெரிவித்துவிட்டதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் உரை, தீவிரவாதத்திற்கு எதிரான நாட்டின் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது என்று பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. ஜெ.பி. நட்டா பாராட்டு தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ள அவர், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் மூலம் பாகிஸ்தானுக்கு பிரதமர் மீண்டும் ஒருமுறை எச்சரிக்கை விடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தானுடன் பேச்சு நடத்துவதென்றால், தீவிரவாதம் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீர் குறித்து மட்டுமே என்பதை பிரதமர் தெளிவுபட கூறியிருப்பதாகவும் திரு. ஜெ.பி. நட்டா அதில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட உயர் ரக வான் பாதுகாப்பு முறைகளை இந்தியா பயன்படுத்தி வெற்றி கண்டதாக விமானப் படை செயல்பாடுகளுக்கான தலைமை இயக்குநர் ஏர் மார்ஷல் ஏ.கே. பாரதி தெரிவித்துள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர் குறித்து முப்படைகளின் தலைமை இயக்குனர்கள் நேற்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசினர்.

அப்போது பேசிய விமானப்படை செயல்பாடுகளுக்கான தலைமை இயக்குனர், தீவிரவாதிகளுக்கு ஆதரவாக பாகிஸ்தான் ராணுவம் செயல்பட்டது வேதனைக்குரியது என்றும், இதன் காரணமாகவே நமது ராணுவம், பாகிஸ்தான் ராணுவத்துக்கு எதிரான நடவடிக்கையை மேற்கொள்வது தவிர்க்க இயலாததாகிவிட்டது என்றும் கூறினார்.

முப்படைகளின் ஒருங்கிணைந்த பாதுகாப்பு கட்டமைப்பு வலுவாக இருந்ததன் காரணமாக பாகிஸ்தான் தாக்குதல் நடத்த மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

வான்வழி தாக்குதலை முறியடித்ததில் ஆகாஷ் ஏவுகணை செயல்பாடுகள் சிறப்பாக அமைந்ததாகவும் ஏர் மார்ஷல் ஏ.கே. பாரதி குறிப்பிட்டார்.

<<<<>>>>

இந்திய எல்லைப் பகுதியில் எந்தவொரு ட்ரோன் தாக்குதலும் நடைபெறவில்லை என்று ராணுவம் தெரிவித்துள்ளது.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை நிறுத்தப்பட்ட நிலையில், பாகிஸ்தான் எல்லையில் இருந்து நேற்றிரவு ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் ஏதும் நடத்தப்பட்டதாக தகவல் இல்லை என்று ராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் இன்று முதல் பள்ளிகளை திறக்க யூனியன்பிரதேச அரசு முடிவு செய்துள்ளது.

ஜம்மு-கஷ்மீர் கல்வியமைச்சர் திருமதி Sakeena Itoo சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரத்தில் ஜம்மு-கஷ்மீர் எல்லைப் பகுதியில் குண்டுவீச்சு தாக்குதல்களைத் தொடர்ந்து பள்ளிகளை மூட முடிவெடுக்கப்பட்டது.

<<<<>>>>

சத்தீஸ்கர் மாநிலத்தில் மத்திய அரசு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து ராய்பூரில் வேளாண்துறை அமைச்சர் திரு. சிவ்ராஜ் சிங் சௌஹான் இன்று ஆய்வு மேற்கொள்கிறார்.

முன்னதாக ராய்ப்பூரில் உள்ள தலைமைச் செயலக வளாகத்தில் மரக்கன்றையும் அமைச்சர் நட்டு வைக்கிறார்.

தொடர்ந்து அம்பிகாபூரில் நடைபெறும் நிகழ்ச்சியில் பிரதமரின் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு வீட்டு சாவிகளை திரு. சிவராஜ் சிங் சௌஹான் வழங்குகிறார்.

இந்த திட்டத்தின்கீழ் வீடு கட்டும் பயனாளிகளின் பூமி பூஜையிலும் அவர் பங்கேற்கிறார்.

பின்னர் நடைபெறும் நிகழ்ச்சியில் அவர், மகளிர் சுயஉதவிக் குழுவினரின் பாராட்டு விழாவிலும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கலந்துகொள்கிறார்.

<<<<>>>>

நாட்டின் ஆட்சி முறையில் ஏற்பட்டுள்ள புரட்சிகர மாற்றத்தில் தொழில்நுட்பத்தின் பங்கு முக்கியமானது என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

எத்தியோப்பியாவில் இருந்து வந்துள்ள உயர்நிலைக் குழுவினரை புதுதில்லியில் நேற்று சந்தித்துப் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவில் தொழில்நுட்ப அடிப்படையிலான சீர்திருத்தங்கள், ஒருங்கிணைக்கப்பட்ட பொதுமக்கள் குறைதீர் கண்காணிப்பு மையம் போன்ற நடவடிக்கைகளே இதற்கு உதாரணம் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக பணம் செலுத்துதல், டிஜிட்டல் முறையிலான வாழ்நாள் சான்றிதழ் போன்ற முயற்சிகளையும் திரு. ஜிதேந்திர சிங் எடுத்துக் கூறினார்.

<<<<>>>>

இந்திய பங்குச்சந்தைகளான சென்செக்ஸ் மற்றும் நிஃப்டி குறியீடுகள் நேற்று 4 சதவீதம் உயர்வை சந்தித்தன.

இந்தியா – பாகிஸ்தான் இடையே போர்நிறுத்தம் ஏற்பட்டுள்ள நிலையில் பங்கு வர்த்தகம் தொடங்கியது முதலே பங்குச்சந்தைகளின் புள்ளிகள் அதிக அளவு உயர்வை எதிர்கொண்டன.

கடந்த 5ஆம் தேதி முதல் சரிவை எதிர்கொண்ட நிலையில் நேற்று பல்வேறு நிறுவனங்களின் பங்குகள் உயர்வுடன் முடிவடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு செஞ்சிலுவைச் சங்க நிகழ்ச்சியில் இன்று பங்கேற்கிறார்.

புதுதில்லியில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் அவர் பங்கேற்று உரையாற்ற இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

நாமக்கல் மாவட்ட அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பிரதமரின் தேசிய தொழிற்பழகுநர் சேர்க்கை முகாம் இன்று நடைபெற உள்ளது.

இதில் மாவட்டத்தைச் சேர்ந்த ஐ.டி.ஐ. முடித்த மாணவர்கள் பங்கேற்றுப் பயன் பெறலாம் என மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

<<<<>>>>

ஆந்திர மாநிலத்தில் கிராம ஊராட்சி வரம்புக்குள் வரும் பாதுகாப்புப் படை வீரர்களின் சொத்துக்களுக்கு முழு வரிவிலக்கு வழங்க அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.

தீவிரவாதிகளுக்கு எதிரான ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை வெற்றிகரமாக மேற்கொண்டதை கௌரவிக்கும் விதமாக ஆந்திராவில் உள்ள அனைத்து பாதுகாப்புப் படை வீரர்களுக்கும் இந்த வரிவிலக்கை அளிப்பதாக அம்மாநில துணை முதலமைச்சர் திரு. பவன் கல்யாண் சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் அரசுமுறைப் பயணமாக இன்று ரியாத் செல்கிறார்.

கடந்த ஜனவரி மாதம் 2வது முறையாக அமெரிக்க அதிபராக பதவியேற்ற பின்னர் அவர் முதல் முறையாக மேற்காசிய நாடுகளுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

நான்கு நாள் பயணம் மேற்கொள்ளும் அவர், தோஹா, கத்தார், அபுதாபி, ஐக்கிய அரபு எமிரேட் ஆகிய இடங்களுக்கும் செல்ல இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

19 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து போட்டியில் இந்தியா இன்று நேபாளத்தை எதிர்கொள்கிறது.

அருணாச்சல்பிரதேசத்தில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

-------------

தாய்லாந்து ஓபன் பேட்மிட்டன் போட்டி பாங்காக்கில் இன்று தொடங்குகிறது.

இப்போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென், ப்ரியன்ஷு ரஜாவத், மால்விகா பன்சோட், உன்னத்தி ஹூடா உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

--------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி வரும் 17ஆம் தேதி மீண்டும் தொடங்கும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை காரணமாக, இந்தியாவுக்கும் - பாகிஸ்தானுக்கும் இடையே பதற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து கடந்த 9ஆம் தேதி முதல் ஐ.பி.எல். போட்டிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

மே 17ஆம் தேதி பெங்களூருவில் நடைபெறும் ஆட்டத்தில் கொல்கத்தா — பெங்களூரு அணிகள் விளையாடும் என்றும், மொஹாலி அல்லது தரம்சாலாவில் எந்தப் போட்டிகளும் நடைபெறாது என்றும் பி.சி.சி.ஐ. அறிவித்துள்ளது.

அகமதாபாதில் நடைபெற இருந்த மும்பை — பஞ்சாப் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் ஜெய்ப்பூரில் வரும் 26ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிளே ஆஃப் சுற்றுப் போட்டிகள் வரும் 29ஆம் தேதி முதல் நடைபெறும் என்றும், இறுதிப் போட்டி அடுத்த மாதம் 3ஆம் தேதி நடைபெறும் என்றும் பி.சி.சி.ஐ. அறிவித்துள்ளது.

<<<<The End>>>>